**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 19/2018**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

பி.வா.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**DW-2**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜேந்திரன் | த/பெ.: | ராசுப்பிள்ளை |
| கிராமம்: | மன்னார்குடி | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 75 | முகவரி: | செல்வானந்த நகர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **13.02.2026.**

**முதல் விசாரணை :-**

நான் மேலே கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சொல்ல இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்திருந்தது. அதனடிப்படையில் இன்று சாட்சி சொல்ல ஆஜராகியுள்ளேன். வாதி நாராயணனை எனக்கு தெரியும். பிரதிவாதி விஜயாவை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டுக்காரர். நாங்கள் அனைவரும் பாலம்மாள்-கணேசன் என்பவரிடமிருந்து மனைகள் வாங்கினோம். மனையில் எப்போது வீடுகள் கட்டினோம். 2012 ல் அவர்கள் வீடு கட்டிவிட்டார்கள். 2020 ல் நான் வேறு நபரிடமிருந்து மனையுடன் கூடிய வீடு வாங்கினேன். விஜயா மீது நாராயணன் என்ன வழக்குதாக்கல் செய்துள்ளார் என்றால் - கன்னி வாய்க்கால் எல்லையை தூர்த்துவிட்டார்கள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். யார் தூர்த்தார்கள் என்றால் - நாராயணன் வகையறா தான் தூர்த்தார்கள். வழக்கு விவரத்தில் என்ன சொல்லியுள்ளார்கள் என்றால் - மனைகள் வாங்கிய நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியுள்ளார். விஜயாவும் அதில் சேருவார். அவ்வாறு நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளோமா என்றால் - இல்லை. பொய்யான தகவல். பிரதிவாதி வீட்டிற்கு எந்த பக்கத்தில் நான் குடியிருக்கிறேன் என்றால் - மேற்கு பக்கம் க.எண்.38 ம் எண்ணில் குடியிருக்கிறேன். பிரதிவாதி க.எண்.39 ல் குடியிருக்கிறார். தாவா சொத்து செல்வானந்தா நகர், மன்னார்குடியில் இருக்கிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் - சாந்திதேவி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன். பாலம்மாள் - கணேசன் என்பரிடமிருந்து சின்னதாய் என்பவர் கிரயம் வாங்கி அவரிடமிருந்து சாந்திதேவி கிரயம் வாங்கினார். நான் எப்போது கிரயம் வாங்கினேன் என்றால் - 2020 ல் வாங்கினேன். 2020 க்கு முன்னார் வழக்கு சொத்து குறித்து என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் - சரிதான். சர்வேயர், தாசில்தார் ஆகியோர்கள் 2017 ல் இடத்தை அளந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் - சரிதான். பட்டாவை எனது பெயரில் மாற்றம்

செய்துக்கொண்டுள்ளேன். எனது நிலத்தின் சரிவே எண் என்னவென்றால் - சர்வே எண்.3/3 ஆகும். விஜயா சர்வே எண்.3/4 ஆகும். என் பெயரில் உள்ள TLSR நகர அளவை பதிவேடு பெற்றுள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. நான் கிரயம் வாங்கிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் - என்னிடம் கேட்கவில்லை. அதனால் தாக்கல் செய்யவில்லை. நான் கிரயம் வாங்கும்போது தாவா சொத்தில் வாய்க்கால் இருந்ததா என்றால் - இல்லை. வாய்க்கால் எப்போது தூர்ந்து போனது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் - சரிதான். வாய்க்காலை தூர்த்ததை நான் பார்த்தேனா என்றால் - வாய்க்கோலையே நான் பார்க்கவில்லை. பட்டா கன்னி வாய்க்கால், புறம்போக்கு வாய்க்கால் என்பதற்கு வித்தியாசம் தெரியுமா என்றால் - தெரியும். பட்டாக்கன்னி என்பது பட்டாத்தாரர்களுக்கு உரியது. நான் வசிக்கும் பகுதியில் சாகுபடி நிலங்கள் எதுவும் கிடையாது என்றாலும் மனைப்பிரிவுகளாக மாறிவிட்டது என்றாலும் - சரிதான். 1990 க்கு பிறகு மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளது. அந்த மனைப்பிரிவுகளை தான் நிறைய நபர்கள் வாங்கி வீடு கட்டியுள்ளார்கள் என்றால் - சரிதான். இந்த வழக்கை நாராயணன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். எதற்காக என்றால் - விஜயா இடத்தை ஆக்கிரமனம் செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். விஜயா வசிக்கும் இடத்திற்கு எந்த பகுதியில் ஆக்கிரமனம் செய்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் - வடக்கு பகுதியில் உள்ள கன்னி வாய்க்காலை ஆக்கிரமனம் செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். விஜயா கிரயம் வாங்கிய ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் - படித்து பார்த்துள்ளேன். வடக்கே வாய்க்காலையும் ராகவாச்சாரியர் நிலத்திற்கும் தெற்கே என்று கண்டுள்ளது என்றால் - சரிதான். ராகவாச்சாரியார் என்பவர் வாதி நாராயணன் என்பவரின் அப்பா என்றால் - சரிதான். ராகவாச்சாரியார் இடத்தில் விஜயாவிற்கு உரிமை கிடையாது என்றால் - சரிதான். பாலம்மாள் என்பவர் கிரயம் செய்துக்கொடுக்கும்போது ஆவணம் எதுவும் கொடுத்தாரா என்றால் - தாய் பத்திரம் கொடுத்துள்ளார். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்பது தெரியுமா என்றால் - வழக்கறிஞரைதான் கேட்கவேண்டும். வருவாய் கணக்குகளை தற்போது பார்த்துள்ளேனா என்றால் - தற்போது சொத்தினை பார்வையிட்டு புல எண்.3 னை பொறுத்து புதியதாக சர்வே எடுக்கவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டுள்ளது. 1400 சதுர மீட்டர் இருந்ததை 1140 சதுர மீட்டர் குறைத்து கொடுத்துவிட்டதால் புதியதாக சர்வே எடுக்கவேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு எனக்கு தபாலில் வந்துள்ளது. விஜயா மற்றும் செந்தில்குமாருக்கும் வந்துள்ளது. குறைந்த இடத்திற்கு அதிகமாக இடம் ஒதுக்கி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் அதனை தான் இரத்து செய்துள்ளார்கள் என்றும் அதனை நான் மாற்றி சொல்கிறேன் என்றால் - சரியல்ல. நாராயணன் என்பவர் மீது உள்ள வன்மத்தால் வாய்க்காலை தூர்த்துவிட்டார் என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் - சரியல்ல. நானும், செந்தில்குமாரும் விஜயாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் - சரியல்ல.

நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் எது தொடர்பாக சாட்சியம் அளிக்கவேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் - சரிதான். வழக்கு விவரங்கள் அனைத்தும் விஜயா சொல்லிதான் தெரியும் என்றால் - எனக்கே தெரியும். நான் கிரயம் பெறுவதற்கு முன்பு 2 ஆண்டுகளுக்கு முன் உள்ள பிரச்சினை குறித்து எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் - சரியல்ல. 2022 க்கு பின்னர் தான் ஆவணங்களை நான் பார்வையிட்டேன்.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.

**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**<u>அசல் வழக்கு எண். 19/2018</u>**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

பி.வா.சா.3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>DW- 3</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில்குமார் | த/பெ.: | தர்மலிங்கம் |
| கிராமம்: | மன்னார்குடி | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 52 | முகவரி: | 40 செல்வானந்தா நகர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **13.02.2026.**

**<u>முதல் விசாரணை</u> :-**

நான் மேலே கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சொல்ல இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்திருந்தது. அதனடிப்படையில் இன்று சாட்சி சொல்ல ஆஜராகியுள்ளேன். இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியும். நாராயணன் மற்றும் விஜயாவை தெரியும். விஜயா நாராயணன் இடத்தை ஆக்கிரமித்ததாக வழக்கு போட்டுள்ளார். விஜயா அவ்வாறு இடத்தை ஆக்கிரமித்துள்ளாரா என்றால் - இல்லை. தாவா சொத்து எங்குள்ளது என்றால் - செல்வானந்தா நகர், மன்னார்குடியில் இருக்கிறது. எனது க.எண்.40 ஆகும். விஜயா க.எண்.39 ல் குடியிருக்கிறார். நான் யாரிடம் சொத்து வாங்கினேன் என்றால் - கணேசன்-பாலம்மாளிடமிருந்து சொத்து வாங்கினேன். நான் வாங்கிய சொத்தில் வடக்கு பக்கம் எல்லை எது என்றால் - கன்னி வாய்க்கால். அந்த வாய்க்காலை நாங்கள் அனைவரும் பயன்படுத்தி வருகிறோமா என்றால் - தரிசாக கிடக்கிறது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கிரயம் பெற்ற புல எண். எது என்றால் - 3/5 ஆகும். நான் எப்போது கிரயம் வாங்கினேன் என்றால் - 2009 ல் கணேசன்-பாலம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன். நான் கிரயம் பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - கேட்காததால் தாக்கல் செய்யவில்லை. விஜயா சம்மந்தப்பட்ட வழக்கு விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் - நான் விஜயா வீட்டிற்கு அருகில் இருப்பதால் ஆதியிலிருந்தே தெரியும். விஜயா குடியிருக்கும் இடத்திற்கு வடக்கு பக்கம் உள்ள நிலம் குறித்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்- சரிதான். அதன் சதுரடி எவ்வளவு என்று தெரியுமா என்றால் - 800 சதுரடி மற்றும் சொச்சம் என்கிறார். சர்வேயர், தாசில்தார், விஏஓ ஆகியோர்கள் அந்த இடத்திற்கு வந்து அளந்து

பார்த்தார்களா என்றால் - 2018 ல் வந்து அளந்து பார்த்து பட்டா கொடுத்தார்கள். 2018 ல் தாவா இடத்தை அளந்து பார்த்து அனைவரது பட்டாவையும் ஆய்வு செய்தார்களா என்றால் - இல்லை. எனது பட்டாவை கோட்டாட்சியர் ஆய்வு செய்தார். 2009 ல் கிரயம் வாங்கியபோது பட்டா வாங்கவில்லை என்றால் - சரியல்ல. அப்போதே பட்டா வாங்கிவிட்டேன். 2009 ல் வாங்கிய பட்டா மற்றும் 2018 ல் கோட்டாட்சியர் வழங்கிய பட்டா ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். என்னிடம் கேட்கவில்லை. விஜயா வீட்டிற்கு வடக்கு பக்கம் தான் ராகவாச்சரியார் நிலமும் வாய்க்காலும் உள்ளது என்றால் - சரிதான். நாங்கள் குடியிருக்கும் பகுதியில் சாகுபடி நிலங்கள் கிடையாது என்றால் - சரிதான். அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட மனைகள் என்றால் - சரிதான். வாய்க்கால் தூர்ந்துவிட்டது என்றால் - சரிதான். வாய்க்கால் பயன்பாடு இல்லாமல் தரிசாக கிடக்கிறது என்றால் - சரிதான். வாய்க்கால் பட்டாக்கன்னியா அல்லது புறம்போக்கு வாய்க்காலா என்றால் - தெரியாது. ராகவாச்சாரியார் நிலத்தில் விஜயாவிற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் -சரிதான். அவரவர் இடத்தினை தாண்டி யாருக்கும் உரிமை கிடையாது. பாலம்மாள்-கணேசன் மாற்று பத்திரம் எழுதி தந்தார்களா என்றால் - தெரியாது. புல எண்.3 ல் உள்ள பட்டாக்களை இரத்து செய்து புதிய பட்டா வழங்க உத்தரவாகியுள்ளது என்றால் - சரிதான். அது சம்மந்தமான ஆவணங்கள் கோட்டாட்சியரிடமிருந்து எங்கள் அனைவருக்கும் வந்தது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் எது குறித்து சாட்சியம் அளிக்கவேண்டும் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் - சரிதான். நானும், விஜயா ஆகியோர்கள் வாதிக்குரிய இடத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் விஜயாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.